

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு, மறைந்த தொழில் அதிபர் ராமஜெயம் அவர்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கேர் கல்லூரியில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற வேட்பாளர்கள் துரைராஜ், சித்ரா பாரிவள்ளல், கருணை ராஜா, டோல்கேட் சுப்பிரமணி, தர்மன் ராஜேந்திரன், அண்ணாதுரை காஜாமலை விஜய், கண்ணன், சீனிவாச பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர்,மன்னார்குடி தொகுதிகளுக்கு கழக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன்,முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் காட்டூரில் உள்ள அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டம் முழுவதும் உள்ள

# 41 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணியே வெற்றி பெறும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, மார்ச் 30 -

கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேருவின் சகோதரரும் தொழிலதிபருமான மறைந்த ராமஜெயத்தின் 14 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருச்சி கேர் காலேஜில் உள்ள அவருடைய உருவ சிலைக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு தலைமையில் திமுகவினர் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்.



தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு,

திருச்சியில் அனைத்து தொகுதிகளிலும் நிச்சயம் மீண்டும் திமுக மற்றும் தோழமைக் கட்சிகள் வெற்றி பெறும். முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராவதற்கு திருச்சி முக்கிய பங்கு வைக்கும் என நம்புகிறோம் மக்களும் அதை தான் விரும்புகிறார்கள்.

திருச்சி மட்டுமல்ல திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டம் முழுவதும் உள்ள 41 தொகுதிகளிலும் நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம்.

பொதுமக்கள் திமுக அணிக்கு வாக்களிக்க தயாராக இருக்கிறார்கள்.

இந்த ஆட்சி மீண்டும் மலர வேண்டும் என்பது தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் போட்டியிட்டால் திமுக வெற்றி சாத்தியமா என்கிற கேள்விக்கு ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் அனைவருக்கும் தேர்தலில் போட்டியிட உரிமை உள்ளது யார் போட்டியிட்டாலும் திமுக வேட்பாளரை வெற்றி பெற செய்ய நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வெற்றி பெற வைப்போம்.

இந்த முறை தேர்தலில் போட்டியிட இளைஞர்கள் மகளிர் என பலருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார் மீதமுள்ள 34 தொகுதிகளிலும் அவர் சேர்த்தே கூறட்டும். 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பது அவருடைய ஆசை ஆனால் அது நிறைவேறப் போவதில்லை. திமுக அணிதான் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெறும்.

கூட்டணியில் யாரையும் விட்டுவிடாமல் அனைவரையும் அரவணைத்து செல்லும் முதலமைச்சருக்கு பெருமை தான்.

விஜய் பிரச்சாரம் செய்வதை நாங்கள் ஏன் தடுக்க போகிறோம். அவரவருக்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுது திமுகவை விமர்சனம் செய்வார்கள்.

டெல்டா மாவட்டங்களுக்கு நல்ல திட்டங்களை கொண்டு வருவதற்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அனைவரும் பாடுபடுவோம்.

திருச்சியை இரண்டாவது தலைநகரமாக அறிவிப்பது குறித்து நிதி நிலைக்கு ஏற்ப முடிவு எடுப்பார்கள் என கூறினார்.

இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் திமுக சட்டமன்ற தொகுதி வேட்பாளர்கள் துரைராஜ், பாரி வள்ளல், கருணை ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# நீல புலிகள் இயக்கம் ஆதரவு!

## இயக்கத் தலைவர் இளங்கோவன் அறிக்கை!

சென்னை, மார்ச். 30-

தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு நீல புலிகள் இயக்கம் நிபந்தனை யற்ற ஆதரவு அளிப்பதாகவும் தி.மு.க. கூட்டணிக்காக அயராது பாடுபடுவோம் என்றும் நீலப்புலிகள் இயக்கம் தலைவர் இளங்கோவன் தெரி வித்துள்ளார்.



நீல புலிகள் இயக்கத்தின் தலைவர் இளங்கோவன் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நீலப் புலிகள் இயக்கம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் பல மாவட்டங்களில் இயங்கி வருகிறது. ஏழை எளிய சாமானிய மக்களுக்கு அரசியல் மற்றும் சமூக சேவைகள் செய்து வருகிறது என்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் தொகுதிகள் மற்றும் அரியலூர், தர்மபுரி, சேலம், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்றும் பல மாவட்டங்களில் உள்ள ஊர்களில் இந்த இயக்கத்தின் சார்பில் எஸ்.சி. எஸ்.டி. போக்குவரத்து தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் பதிவு செய்து இயங்கி வருகிறது. இதில் சுமார் 15,000 மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர் என்றும் 2026இல் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் நீல புலிகள் இயக்கம் சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் – மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் – மருத்துவர் நா.எழிலன் ஆகியோர் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி.யிடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி.,, பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.பரமசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளரும் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான வே.கௌதமன், மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.

## திருவாரூர் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில்

# கழக வேட்பாளர்கள் பூண்டி கலைவாணன் - டி.ஆர்.பி.ராஜா மரியாதை!

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை வணங்கி பிரச்சாரத்தை துவக்கினர்!

திருவாரூர்,மார்ச்.30.

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய திருவாரூர் மற்றும் மன்னார்குடி சட்டமன்ற தொகுதி களுக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கழக வேட்பாளர்களாக கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடும், வான் நின்று வாழ்த்தும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல் ஆசிகளோடும் தலைமைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டி ருக்கும் பூண்டி. கே.கலைவாணன் முனைவர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடம் ,முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை உள்ளிட்ட இடங்களில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தலைமைகழகத்தால் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திருவாரூர் மற்றும் மன்னார்குடி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட கழக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், கழக தோழர்கள் அந்தந்த பகுதிகளில் பட்டாசு வெடித்தும் இனிப்புக்கள் வழங்கியும் தங்கள் மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தினார்.

அதனை தொடர்ந்து மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் , முனைவர் டி. ஆர். பி.ராஜா ஆகியோர் இணைந்து காட்டூரில் உள்ள அஞ்சுகத்தம்மையார் நினை விடத்தில், அம்மையார் நினைவிடம் ,முரசொலி ஆசிரியர் செல்வம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறான் ஆகியோர் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் திருவாரூர் நாகை சாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை , பழய பேருந்துநிலையத்தில் உள்ள தந்தை பெரியார் சிலை, நகர கழக அலுவலகம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலை , மற்றும் காட்டூர் கலைஞர் கோட்டம் ஆகிய இடங்களுக்கு சென்று மலர்தூவியும் மலர்மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தி னர்.

பின்னர் திருவாரூரில் இயங்கவிருக்கும் கழக வார் ரூம் [war roorm] அலுவலகத்தை மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் திறந்து வைத்தார். நிகழ்வு களில் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், புலிவலம் ஏ.தேவா, சேகர் கலியபெருமாள், ஐ.வி. குமரேசன், நகர செயலாளர்கள் வாரை.எஸ்பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி.கே. கலைவேந்தன், மன்னார்குடி தொகுதி நகர செயலாளர் வீரா.கணேசன், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ். டி.முதுவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே,வி. கே.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தருமபுரி மாவட்டத்தில் ஊட்டச்சத்து உணர்திறன்

# வேளாண்மையை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

தருமபுரி, மார்ச். 30-

ஊட்டச்சத்து உணர்திறன் வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் சிறு தானியங்கள்,பருப்பு வகைகள்,பழங்கள் மற்றும் காய்கறிகள் கிடைக்கும் தன்மை,அணுகல் மற்றும் அதன் நுகர்வை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசு ஏதேனும் வழிமுறைகளையோ அல்லது கொள்கைகளையோ வகுத்துள்ளதா?



மழையையே வேளாண்மைக்கு பெரிதும் நம்பியுள்ள தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் இது போன்ற ஏதேனும் திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தி உள்ளதா?

ஊட்டச்சத்து நிறைந்த பயிர்கள்,சமையலறை தோட்டம்,உயிர்ச்சத்து செறிவூட்டப்பட்ட இரகங்கள்,மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை முறை ஆகியவற்றை தருமபுரி மாவட்டத்தில் மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டம் முழுவதும் பெண்கள்,குழந்தைகளின் ஊட்டச்சத்து,பொது சுகாதாரம் குறித்த திட்டங்கள் சரிவர சென்றடைந்துள்ளதா என்பதை ஒன்றிய அரசு உறுதிப்படுத்தியுள்ளதா?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள சிறு,குறு விவசாயிகளிடையே ஊட்டச்சத்து உணர்திறன் வேளாண்மையை ஊக்குவித்து,விழிப்புணர்வை மேம்படுத்தி,திறன் மேம்பாடு மற்றும் சந்தை ஆதரவிற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணைஅமைச்சர் பகீரத் சௌத்ரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



காஞ்சிபுரத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் உத்திரமேரூர் க. சுந்தர் காஞ்சிபுரம் திருமதி நித்யா சுகுமார் ஆகியோர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.